பிரஸார் பாரதி
<u>இந்திய வானொலி, சென்னை-4</u>

22 05 2024 12 40
புதன்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மக்களவைத் தேர்தலில் எஞ்சியுள்ள இரண்டு கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.
2. இந்திய கடற்படை எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயாராக இருப்பதாக கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி தெரிவித்துள்ளார்.
3. உக்ரைன் எல்லைப்பகுதியில் ரஷ்யா அணு ஆயுத ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.
4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் எலிமினேட்டர் சுற்றில் ராஜஸ்தான் அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் எஞ்சியுள்ள இரண்டு கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆறாவது கட்டமாக சனிக்கிழமை வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 57 தொகுதிகளில் பிரச்சாரம் நாளை நிறைவடைகிறது.

பீகாரில் எட்டு தொகுதிகள், ஹரியானாவில் பத்து, ஜார்க்கண்டில் நான்கு, ஒடிஸாவில் ஆறு, உத்திரபிரதேசத்தில் 14, மேற்குவங்கத்தில் எட்டு, தில்லியில் ஏழு தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உத்திரபிரதேச மாநிலத்தில் ஆறாவது மற்றும் ஏழாவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் முழுவீச்சுடன் நடைபெற்று வருகிறது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி இம்மாநிலத்தில் பாஸ்தி மற்றும் ஸ்ரவஸ்த்தி தொகுதிகளில் தேர்தல் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார்.

அம்மாநில முதலமைச்சரும், கட்சியின் மூத்த தலைவருமான திரு யோகி ஆதித்யநாத் ஜானுப்பூர், சுல்தான்பூர், சித்தார்த்நகர் ஆகிய இடங்களில் வாக்கு சேகரிக்கிறார்.

பகுஜன் சமாஜ்கட்சியின் தலைவர் செல்வி மாயாவதி சுல்தான்பூரிலும், சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ் அசம்கரிலும் வாக்கு சேகரிக்கின்றனர்.

தலைநகர் தில்லியிலும் பிரச்சாரம் நாளை முடிவடையவுள்ள நிலையில் பிஜேபி மூத்த தலைவர் திரு நரேந்திரமோடி, காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே ஆகியோர் வாக்கு சேகரிக்கவுள்ளனர்.

**[]<<<>>>[]**

இந்திய கடற்படை கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதோடு மட்டுமன்றி எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி தெரிவித்துள்ளார்.

கடற்படையில் புதிதாக இணைந்துள்ள அதிகாரிகளிடையே புதுதில்லி தலைமையகத்தில் உரையாற்றிய அவர், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட கடற்படை தளவாடங்கள் மற்றும் போர்க் கப்பல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தை புகுத்துவது, தொழில்நுட்ப ரீதியிலான பிரச்சினைகளுக்கு உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே தீர்வு காண்பது ஆகியவற்றில் கடற்படை உறுதியுடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பான சூழ்நிலையை எப்போதும் உறுதி செய்ய வேண்டுமென்றும், கடல்சார் பாதுகாப்பு தொடர்பாக அவ்வப்போது எழும் சவால்களை எதிர்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டுமென்று அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

கடற்படையில் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வரும் அதிகாரிகளுக்கு அட்மிரல் தினேஷ் திரிபாதி தமது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மத்திய மின்னணு சாதன அடையாள சேவை இணையதளம் தொடங்கப்பட்டதிலிருந்து தெலங்கானாவில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட செல்போன்கள் மீட்கப்பட்டதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த இணையதளம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மத்திய தொலைத் தொடர்புத்துறையால் தொடங்கப்பட்டது.

செல்போன் திருட்டை தடுக்கவும், செல்போன்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கும் இந்த இணையதளம் கொண்டுவரப்பட்டது.

தெலங்கானாவில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் இந்த இணையதள சேவை வழங்கப்பட்டுள்ளதாக மாநில குற்றப் புலனாய்வு பிரிவின் கூடுதல் தலைமை இயக்குநர் திரு மகேஷ் பகவத் தெரிவித்தார்.

கடந்த ஒன்பது நாட்களில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட செல்போன்கள் மீட்கப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

உலக பொருளாதார கூட்டமைப்பு வெளியிட்டுள்ள சுற்றுலா வளர்சசிக்கான தரவரிசையில் இந்தியா 39-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

கடந்த 2021-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தர வரிசையில் இந்தியா 54-வது இடத்தில் இருந்தது.

[]<<<>>>[]

உக்ரைன் எல்லைப் பகுதியில் அணு ஆயுத முதல்கட்ட சோதனைகளை ரஷ்ய படையினர் தொடங்கி உள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாஸ்கோவிலிருந்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், மேற்கத்திய அச்சுறுத்தல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த அணு ஆயுத சோதனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனையில் ரஷ்ய ராணுவத்தின் இஸ்காண்டர் மற்றும் **Kinzhal** ஏவுகணைகள் பயன்படுத்தப் பட்டதாகவும், அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது வடகிழக்கு திசையில் நகர்ந்து நாளை மறுநாள் காற்றழுத்த தாழ்வுமண்டலமாக வலுவடைய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செந்தாமரைக்கண்ணன்) -31-- செகண்ட்*

இதனிடையே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

குழித்துறை தாமிரபரணி ஆற்றின் தரைப்பாலத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் அப்பகுதியில் போக்குவரத்து தடைபட்டுள்ளது.

இந்நிலையில் திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து குறைந்துள்ளதால் இன்று முதல் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - திருமலை ) --39- செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா நாளை ஓய்வுபெறுவதையடுத்து, பொறுப்பு தலைமை நீதிபதியாக நீதிபதி திரு ஆர் மகாதேவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது உயர்நீதிமன்ற நீதிபதியாக உள்ள திரு ஆர் மகாதேவன், நாளை மறுநாள் முதல் தலைமை நீதிபதி பொறுப்புகளை கவனிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் நடைபெறும் முக்கிய விழாக்களில் ஒன்றான வைகாசி விசாக திருவிழாவை இன்று வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

இன்று அதிகாலை முதல் மக்கள் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - லஷ்மணன் ) ---40 செகண்ட்*

வைகாசி விகாத்தையொட்டி தமிழகத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் இன்று சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

கன்னியாகுமரி அருள்மிகு பகவதி அம்மன் கோவிலில் வைகாசி திருவிழா தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில் ஏராளமான பொதுமக்களும், சுற்றலாப் பயணிகளும் கலந்து கொண்டு தேரினை வடம்பிடித்து இழுத்தனர்.

[]<<<>>>[]

தேனீ மாவட்டம் வைகை அணையிலிருந்து இன்று முதல் வரும் 26-ஆம் தேதிவரை மதுரை மாவட்டத்தில் உள்ள பூர்வீக பாசனப்பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இன்று காலை ஆறு மணிக்கு 400 கன அடி வீதம் அணையின் சிறிய மதகுகள் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா மாநிலம் புனே மாவட்டத்தில் உள்ள இந்தப்பூர் உஜானி அணையில் படகு கவிழ்ந்ததில் ஏழு பேர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களை தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

படகில் பயணம் செய்த ஒருவர் மட்டும் நீந்தி கரை சேர்ந்தார்.

கலாசி என்ற இடத்திலிருந்து **Kugaon** என்ற இடத்திற்கு அந்த படகு சென்று கொண்டிருந்தபோது சூறைக்காற்று வீசியதால் படகு கவிழ்ந்து விபத்து நேரிட்டது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் எலிமினேட்டர் சுற்றில் ராஜஸ்தான் அணி – பெங்களுரு அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாத்தில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தின் மகளிர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து - ஸ்காட்லாந்தின் கிறிஸ்டி கில்மோரை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசிய தொடர் ஓட்ட சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளன.

**[]<<<>>>[]**

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் இன்று அர்ஜெண்டினாவை எதிர்கொள்கின்றன.

பெல்ஜியம் நாட்டின் **Antwerp** நகரில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

***End of News***